**<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>**
<u>OS No: 27/2021</u>

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | சந்திரன் |
| த.க.பெயர் | கொழந்தசாமி |
| கிராமம் | கைக்கோளபாளையம் |
| மாவட்டம் | ஈரோடு |
| வயது | 51 |

**<u>வா.சா.2 நாள் 18.08.2025</u>**

**<u>முதல் விசாரணை:</u>** (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

நான் வழக்கின் வாதி தரப்பு சாட்சி. என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

**<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)</u>**

வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரி. வாதி மனோகரன் அழைத்ததன்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மனோகரன் எனக்கு தெரியும். அவர் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். எனது முதல் விசாரணை வாக்குமூலம் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். கடனுறுதி சீட்டில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். எனக்கு வாதியை 10-15 ஆண்டுகளாக தெரியும். நான் இதே நீதிமன்றதில் வேறு வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அது நிலம் சம்பந்தமான வழக்காகும். கடனுறுதி சீட்டை எழுதும்போது நான் தரப்பினர்களின் ஆதார் அட்டையை பார்த்தேனா என்றால்

பார்க்கவில்லை. கடனுறுதி சீட்டில் சொல்லப்பட்டுள்ள பிரதிவாதியின் பெயர் வேறு, கடன் வாங்கியதாக சொல்லும் நபரின் பெயர் வேறுபட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டேன். அவரின் கணவர் பெயரும் வெவ்வேறு என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் வீட்டின் கதவு எண், தெரு பெயர் , விலாசம் எழுதுவதை நான் பார்த்தேன். கடனுறுதி சீட்டை நான் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து பார்த்தேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டு என்ன மையினால் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, கருப்பு மையினால் எழுதப்பட்டது. கடனுறுதி சீட்டில் ஒரு ரூபாய் முத்திரை ஒட்டப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் அது நீதிமன்ற முத்திரையா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி கடன் கேட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் பிரதிவாதி சொல்லி தெரியும். எனக்கு பிரதிவாதி யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டை சாட்சியாக இருப்பதற்கு யார் என்னை அழைத்தார்கள் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முருகேசன் எனக்கு தெரிந்தவர். நான், முருகேசன், வாதி ஆகியோர் ஒன்று சேர்ந்து யாரோ ஒருவர் எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டின் அடிப்படையில் பிரதிவாதியின் மீது பொய்யாக வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கேட்டுக் கொண்டபடி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முருகேசன் பிரதிவாதியின் ஆதார் அட்டையை பெற்று அதிலுள்ள விவரங்கள் அடிப்படையில் கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்தார். அதிலுள்ள விலாசத்தை தான் அவர் எழுதினார் என்றால் அதை பற்றி தெரியாது.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.08.18 17:06:18 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS